Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# தமிழ் மக்கள் குரல்

tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | புதன், அக்டோபர் 09, 2024 | இதழ் 179

## போராட்ட பந்தல் அகற்றம்; பதட்டம் நள்ளிரவில் வீடுகளுக்குள் புகுந்து ‘சாம்சங்’ தொழிலாளர்கள் கைது காவல்துறையின் மிக மோசமான அத்துமீறல்

## சி.ஐ.டி.யூ. தலைவர் சவுந்தரராஜன் கண்டனம்



சென்னை, 09 அக் 2024: போராட்டத்தில் ஈடுபட்டு வந்த சாம்சங் நிறுவன ஊழியர்கள் கைது செய்யப்பட்டனர். காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் அடுத்துள்ள சுங்குவார்சத்திரம் அருகே சாம்சங் தொழிற்சாலையில் பணியாற்றும் ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த மாதம் 9 ந் தேதி முதல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். போராட்டம் 30 நாளை நெருங்கிய நிலையில் நேற்று முன்தினம் காலை சுங்குவார்சத்திரத்தில் 'சாம்சங்' நிறுவன அதிகாரிகள், தொழிலாளர்கள் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தது. அதனைத்தொடர்ந்து, அன்று மாலை சென்னை தலைமைச்செயலகத்தில் இரு தரப்பினரையும் அழைத்து அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், டி.ஆர்.பி.ராஜா, சி.வி.கணேசன் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். ஆனால், நேற்று காலை போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் யாரும் பணிக்கு திரும்பவில்லை. தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த, சாம்சங் தொழிலாளர்களின் வீடுகளுக்கு நள்ளிரவில் சென்ற போலீசார், 10-க்கும் மேற்பட்டோரை கைது செய்துள்ளனர். மேலும் போராட்டத் திடல்களில் இருந்த பந்தல்களையும் பிரித்துள்ளனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. இந்த பகுதியில் போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர்.

செல்வப்பெருந்தகை, முத்தரசன், பாலகிருஷ்ணன், வேல்முருகன் என அனைத்து கட்சித் தலைவர்களும் போராடும் தொழிலாளர்களை நேரடியாக சந்திக்க இருந்த நிலையில், காவல்துறை இந்த நகர்வை முன்னெடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. இதனிடையே, சாம்சங் தொழிலாளர்களை நள்ளிரவில் வீடு புகுந்து போலீசார் கைது செய்ததற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

இன்று காலை வழக்கம் போல் ஊழியர்கள் போராட்டம் நடத்தும் இடத்திற்கு வந்தனர். அப்போது அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் அவர்களை அப்புறப்படுத்த முயன்றனர். ஆனால் ஊழியர்கள் அங்கிருந்து செல்ல மறுத்தனர். இதனால் ஊழியர்கள் மற்றும் போலீசாரிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. தொடர்ந்து ஊழியர்கள் அந்த இடத்தில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். சிஐடியு தலைவர் சவுந்தரராஜன் மற்றும் மாநில நிர்வாகிகள் சம்பவ இடத்திற்கு வந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் சிஐடியூ தலைவர் சவுந்தரராஜன் செய்தியாளர்களை சந்தித்தார். அப்பொழுது அவர் பேசியதாவது:

இது காவல்துறையின் மிக மோசமான அத்துமீறல். காவல்துறை இப்படியெல்லாம் செய்வதற்கு சட்டமே இல்லை. இந்த இடமே தனியார் இடம். இங்கே வந்து கைது செய்வதற்கு எந்த உரிமையும் கிடையாது. இவ்வளவு அக்கிரமமாக காவல்துறை நடந்து கொள்வது ஆட்சிக்கு நல்லதல்ல. முதல்வர் இதில் உடனடியாக தலையிட வேண்டும். காலனியாக இந்த நாடு இருக்கும்பொழுது காவல்துறை எப்படி எல்லாம் மக்களுக்கு எதிராக அடக்குமுறையை ஏவி எப்படி கொடுமைப்படுத்தினார்களோ அதேபோன்ற காரியத்தில் இவர்கள் ஈடுபடுகிறார்கள். கார்ப்பரேட் நிறுவனத்திற்கு ஆதரவாக பெரும்பான்மை தொழிலாளிகளை சிறுபான்மை தொழிலாளிகளின் பக்கம் சாய்ப்பதற்காக அவர்களை மிரட்டுவதிலும் அவர்களை அச்சுறுத்துவதிலும் போலீசே ஈடுபடுகிறது. 31 நாட்களாக வேலை நிறுத்தம் நடத்துவதன் மூலமாக தமிழ்நாடு முழுவதும், இந்தியா முழுவதும் எங்களுடைய எதிர்ப்பை காட்டி வருகிறோம். கார்ப்பரேட்க்கு ஆதரவாக இந்த அரசு செயல்படுவது தவறு. அமைச்சர் எங்களுடைய கோரிக்கை என்னவென்றே புரிந்து கொள்ளவில்லை. அவர் புரிந்து கொள்ளவில்லையா அல்லது புரிந்து கொள்ளாத மாதிரி நடிக்கிறாரா என்று தெரியவில்லை. ரிஜிஸ்ட்ரேஷன் என்பது எங்களுடைய உடனடி கோரிக்கை அல்ல. ரிஜிஸ்ட்ரேஷன் செய்தால் எங்களுடைய வேலை நிறுத்தத்தை வாபஸ் வாங்குவோம் என்று எப்போதும் எங்கேயும் சொல்லவில்லை. ரிஜிஸ்ட்ரேஷன் என்பது ஆட்டோமேட்டிக்காக எங்களுக்கு கிடைக்கும். இன்றைக்கு இல்லை என்றால் நாளைக்கு கிடைக்கும். நாளை இல்லை என்றால் அடுத்த மாதம் கிடைக்கும். அதற்கு அமைச்சருடைய தயவு எங்களுக்கு தேவையில்லை.

இவர்களாக செய்ய வேண்டியதை கடந்து போனதால்தான் நாங்கள் நீதிமன்றத்திற்கு சென்றோம். நீதிமன்றத்திற்கு போன பிறகு அமைச்சர் என்ன சொல்வது. நீதிமன்றம் சொல்வதுபடி நடந்து கொள்ளலாம் என்று சொல்வதற்கு இவர் என்ன. ஆகவே அமைச்சர் சொல்வது தவறு. அவர் செய்வது மழுப்பல். எங்கள் கோரிக்கையாக அல்ல எங்கள் கோரிக்கை சங்கத்தை ஏற்க வேண்டும் அங்கீகரிக்க வேண்டும் என்பதே. அதைக் கூட ஒத்துக்கொள்ள வைக்கவில்லை என்றால் எதற்காக அரசு? எதற்காக ஆட்சி? நேற்று இரவு முழுவதும் பத்து பேரை கைது செய்தார்கள். எல்லா குடும்பங்களையும் அச்சுறுத்தியுள்ளீர்கள். எல்லா குடும்பத்திலும் பீதி உண்டாக்கி இருக்கிறீர்கள். பெண்கள் முழுவதும் நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதுதான் அரசு செய்ய வேண்டிய காரியமா? எந்த வகையிலும் நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. இது போலீஸினுடைய அத்துமீறல்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிலையில் போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களை கலைந்து செல்ல போலீசார் அறிவுறுத்தினர். ஆனால் போலீசாரின் அறிவுறுத்தலையும் மீறி அங்கு போராட்டம் நடைபெற்றது. அதில் சில ஊழியர்கள் மயக்கமடைந்த நிலையில் அவர்கள் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

இந்நிலையில் கூடுதலாக போலீஸார் குவிக்கப்பட்டனர். தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்ட சிஐடியு தலைவர் சவுந்தரராஜன், செயலர் முத்துக்குமார் உள்பட 250 ஊழியர்களை போலீசார் குண்டுக்கட்டாக தூக்கி சென்று கைது செய்து வேனில் அழைத்துச் சென்றனர். அவர்களை தனியார் திருமண மண்டபங்களில் அடைத்து வைத்தனர். இதனால் அந்த பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

## சென்னையில் ‘ரூட்டு தல’ மோதலில் படுகாயமடைந்த கல்லூரி மாணவர் சிகிச்சை பலனின்றி இன்று உயிரிழப்பு : 5 பேர் கைது




சென்னை, 09 அக் 2024: ரூட்டு தல மோதல் விவகாரத்தில் படுகாயமடைந்த கல்லூரி மாணவர் சிகிச்சை பலனின்றி இன்று காலை உயிரிழந்தார். கல்லூரி மாணவரை தாக்கிய விவகாரத்தில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை மாநில கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வந்தவர் சுந்தர். இவருக்கும், பச்சையப்பன் கல்லூரியை சேர்ந்த மாணவர்களுக்கும் இடையே அடிக்கடி கோஷ்டி மோதல் இருந்து வந்தது. இந்தநிலையில் கடந்த சனிக்கிழமை சென்டிரல் புறநகர் ரெயில் நிலையத்தில் நின்று கொண்டிருந்த சுந்தர் மீது 5 பேர் கொண்ட கும்பல் திடீரென கொலைவெறி தாக்குதலில் ஈடுபட்டது. இந்த தாக்குதலில் படுகாயம் அடைந்த சுந்தரை, அக்கம் பக்கத்தினர் மீட்டு சிகிச்சைக்காக ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த மாணவர் சுந்தர் சிகிச்சை பலனின்றி இன்று காலை உயிரிழந்தார். கல்லூரி மாணவர் உயிரிழந்ததையடுத்து அசம்பாவிதம் ஏற்படாத வகையில் போலீசார் முன்னெச்சரிக்கை நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். பச்சையப்பன் கல்லூரி, மாநிலக் கல்லூரிகளில் போலீசார் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

மின்சார ரெயில் வழித்தடத்திலும் தீவிர கண்காணிப்பு பணியில் போலீசார் ஈடுபட்டுள்ளனர். சென்ட்ரல் ரெயில் நிலையத்தில் உதவி ஆணையர் தலைமையில் போலீசார் மற்றும் ரெயில்வே பாதுகாப்பு படையினர் இணைந்து தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். ரெயில்களில் இறங்கி வரும் மாணவர்களின் அடையாள அட்டைகளும் ஆய்வு செய்து வருகின்றனர்.

கல்லூரி மாணவரை தாக்கியதாக திருமுல்லைவாயல் பகுதியை சேர்ந்த ஈஸ்வர், ஹரி பிரசாத், கமலேஸ்வரன், சந்துரு, யுவராஜ் ஆகிய 5 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளனர். இதனையடுத்து சுந்தர் தாக்கப்பட்ட வழக்கு கொலை வழக்காக மாற்றப்பட்டுள்ளது. இது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், மாணவர் சுந்தர் உயிரிழந்த சம்பவத்தை அறிந்து சென்னை மாநில கல்லூரி மாணவர்கள் கல்லூரி நுழைவு வாயிலில் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை கலைந்து செல்லும்படி போலீசார் வலியுறுத்தினர். ஆனால் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து செல்ல மறுத்து தரையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாணவர்களின் போராட்டம் காரணமாக சென்னை மாநில கல்லூரிக்கு இன்று முதல் ஞாயிற்றுக்கிழமை வரை விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான அறிவிப்பை மாநிலக் கல்லூரியின் முதல்வர் ராமன் அறிவித்துள்ளார். இருந்த போதிலும் மாணவர்கள் அங்கிருந்து கலைந்து செல்லாமல் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

முன்னதாக, உயிரிழந்த மாணவர் சுந்தருக்கு ஆசிரியர்கள், மாணவர்கள் கல்லூரி வளாகத்தில் மௌன அஞ்சலி செலுத்தினர்.






PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# புதிய தொழில்துறை வரையறைகளை அமைக்கும் அனலிடிகா அனகான், இந்தியா லேப் எக்ஸ்போ மற்றும் பார்மா ப்ரோ பேக் நிறுவனங்கள்



சென்னை, 09 அக் 2024: மெஸ்ஸே முயென்சென் இந்தியா நிறுவனம், ஹைதராபாத்தில் உள்ள ஹைடெக்ஸ் கண்காட்சி மையத்தில், மிகப்பெரிய அனாலிட்டிகா அனாகான் இந்தியா, இந்தியா லேப் எக்ஸ்போ மற்றும் பார்மா ப்ரோ&பேக் எக்ஸ்போ ஆகியவற்றின் மிகப்பெரிய பதிப்பை வெற்றிகரமாக முடித்தது. "முன்னேற்றத்தின் மையம்" என்ற கருப்பொருளில் நடைபெற்ற இந்த நிகழ்வை, தெலுங்கானா அரசின் ஐடி, எலக்ட்ரானிக்ஸ் & கம்யூனிகேஷன்ஸ், தொழில் மற்றும் வர்த்தகம் மற்றும் சட்டமன்ற விவகாரங்களுக்கான மாண்புமிகு அமைச்சர் ஸ்ரீ டுடில்லா ஸ்ரீதர் பாபு அவர்கள் துவங்கி வைத்தார்.

இந்த நிகழ்வு வாடிக்கையாளர் மற்றும் விற்பனையாளர்களுடன் நேரடியாக ஈடுபட கண்காட்சியாளர்களுக்கு ஒரு மாறும் தளத்தை வழங்கியது. ரஷ்யா, வியட்நாம், நேபாளம், இந்தோனேஷியா, எகிப்து, கானா, லிபியா, தென்னாப்பிரிக்கா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் இருந்து வாடிக்கையாளர்களை ஈர்த்ததுடன், இந்தியாவின் 25 க்கும் மேற்பட்ட நகரங்களில் இருந்து வந்த கண்காட்சியாளர்களுக்கு சர்வதேச வாடிக்கையாளர்களை தொடர்புகொள்வதற்கும் இந்நிகழ்வு உதவியது.

இந்நிகழ்வு குறித்து மெஸ்ஸே முயென்சென் இந்தியா நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி பூபிந்தர் சிங் கூறுகையில், அனலிடிகா அனகான், இந்தியா லேப் எக்ஸ்போ மற்றும் பார்மா ப்ரோ பேக் நிறுவனங்களின் வெற்றியானது, ஆய்வகம் மற்றும் மருந்துத் தொழில்துறையில் நிகழும் அபரிமிதமான வளர்ச்சியையும் புதுமையையும் பிரதிபலிக்கிறது. இந்த ஆண்டின் நிகழ்வு பல்வேறு தொழில்நுட்பங்கள் மற்றும் தீர்வுகளை ஒன்றிணைத்து, அர்த்தமுள்ள ஒத்துழைப்பை வளர்ப்பது மற்றும் தொழில்துறையை முன்னோக்கி செலுத்துகிறது. இந்த முக்கியமான துறைகளின் முன்னேற்றத்திற்கு நாங்கள் தொடர்ந்து ஆதரவளித்து வருவதால், முன்னேற்றம், புதுமை மற்றும் உலகளாவிய கூட்டாண்மைகளுக்கு எங்கள் தளம் ஒரு ஊக்கியாக செயல்படுகிறது என்பதில் பெருமிதம் கொள்கிறோம்." இன்றி கூறினார்.

ஐஏஐஏ வின் தலைவர் சந்திரஹாஸ் செஷட்டி குறிப்பிடுகையில், இந்த ஆண்டு பதிப்பு, பங்கேற்பு மற்றும் ஈடுபாட்டின் அடிப்படையில் புதிய வரையறைகளை அமைத்துள்ளது மட்டுமல்லாமல், ஆய்வக மற்றும் பகுப்பாய்வுத் துறைகளின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் மேம்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் நிலையான நடைமுறைகள் வகிக்கும் முக்கிய பங்கை எடுத்துக்காட்டுகிறது. இதுபோன்ற ஒரு மாற்றத்தக்க நிகழ்வை இணைந்து ஏற்பாடு செய்வதில் பெருமிதம் கொள்கிறோம்." என்று கூறினார்.

ஐபிஎம்எம்ஏ தலைவர் ஹர்ஷித் ஷா பேசுகையில், நாம் எதிர்காலத்தை நோக்கிப் பார்க்கையில், பார்மா ப்ரோ&பேக் எக்ஸ்போ, வளர்ச்சியை வளர்ப்பதற்கும், கூட்டாண்மைகளை உருவாக்குவதற்கும் மற்றும் மருந்துத் துறையின் வளர்ந்து வரும் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கும் ஒரு முக்கிய தளமாகத் தொடரும்." என்று தெரிவித்தார்.

# காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையிலான 'நவ்ரஸ் கதா காலேஜ்' திரைப்படத்திற்கு விளம்பரம் செய்து பிரவீன் ஹிங்கோனியா சாதனை



கன்னியாகுமரி, 09 அக் 2024: காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையிலான சாலை மேம்பாட்டுப் பணியை இறுதியாக 'நவ்ரஸ் கதா காலேஜ்' குழுவினர் பேருந்தில் முடித்ததன் மூலம் பாலிவுட்டின் வரலாற்றில் ஒரு அரிய சாதனை இப்போது நிறுவப்பட்டுள்ளது. இன்று கன்னியாகுமரியில் செய்தியாளர்களிடம் பேசிய தயாரிப்பாளரும், நடிகரும், இயக்குனருமான பிரவீன் ஹிங்கோனியா, "எங்கள் கருத்தாழம் மிக்க திரைபடத்தின் ட்ரெய்லருக்கு பொதுமக்கள் பெருவாரியான வரவேற்பை அளித்தனர்.

இந்திய சினிமா வரலாற்றில் இதுவரை கண்டிராத பணியை "நவ்ரஸ் கதா கொலாஜ்" குழுவினர் சாதித்துள்ளனர் - படத்தின் விளம்பரத்திற்காக காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை சாலைப் பயணம் மேற்கொண்டுள்ளோம். 58 தேசிய மற்றும் சர்வதேச விருதுகளை வென்ற தங்களின் வரவிருக்கும் இந்தி திரைப்படத்தின் பான் இந்தியா ப்ரோமோஷனை இப்போது முடித்த தயாரிப்பாளர் பிரவீன் ஹிங்கோனியா மற்றும் எஸ்கேச் படேல் ஆகியோரால் நாடு முழுவதும் திரைப்படத்திற்கான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. வாகா பார்டர், கோல்டன் டெம்பிள், ஜாலியன் வாலா பாக், கட்கர் காலான் தொடங்கி மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் தெற்கு வரை நாடு முழுவதும் சுற்றுப்பயணத்தை குழுவினர் முடித்துள்ளனர். அவர்கள் மக்களிடம் பேசினர் மற்றும் பார்வையாளர்களிடமிருந்து நல்ல வரவேற்பைப் பெற்றனர்.

தயாரிப்பாளர் இயக்குநரும் நடிகருமான பிரவீன் ஹிங்கோனியா, அதுல் ஸ்ரீவஸ்தவா, அல்கா அமின், ஸ்வர் ஹிங்கோனியா உள்ளிட்ட படத்துடன் தொடர்புடைய குழுவினர் சினிமா பயணத்தை முடித்தனர். இந்த டிரெய்லரை இந்திய ராணுவ வீரர்களுக்கும் காட்டப்பட்டது, அவர்களுக்கு மிகவும் பிடித்திருந்தது.

பாரத் பிரிமானுக்காக ஒரு சிறப்பு வேனிட்டி வேன் தயார் செய்யப்பட்டது, அதில் நவ்ரஸ் கதா காலேஜ் படத்தின் விளம்பரத்திற்காக காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை அனைத்து குழுவினரும் இந்த வேனில் பயணம் செய்தனர், பிரவீன் ஹிங்கோனியா தனது சமூக படத்தின் தீம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

இந்த படத்தில் 9 சவாலான கேரக்டர்களில் நடித்த எழுத்தாளர், இயக்குனர் மற்றும் நடிகர் பிரவீன் ஹிங்கோனியா, கமல்ஹாசன் மற்றும் சஞ்சீவ் குமார் ஆகியோருக்கு தன் நன்றியை காணிக்கையாக்கியுளார்.

இந்த படத்தின் மற்ற நடிகர்கள் ஷாஜி சவுத்ரி, தயானந்த் ஷெட்டி, ரேவதி பிள்ளை, சுனிதா ஜி, மகேஷ் சர்மா, பிராச்சி சின்ஹா, அமர்தீப் ஜா, ஸ்ரேயா ஜா, ஜெய் சங்கர் திரிபாதி, இஷான் சங்கர் மற்றும் ஸ்வர் ஹிங்கோனியா. எஸ் கே எச் படேலேண்ட் பிரவீன் ஹிங்கோனியா தயாரித்தார், அபிஷேக் மிஸ்ரா இணைந்து தயாரித்த நவ்ராஸ் 18 அக்டோபர் 2024 அன்று வெளியிடப்படவுள்ளது.

# போராட்டத்தை கைவிட வேண்டும்: தங்கம் தென்னரசு வேண்டுகோள்

சென்னை, 09 அக் 2024: சாம்சங் தொழிலாளர்கள் போராட்டத்தை கைவிட வேண்டும் என்று அமைச்சர் தங்கம் தென்னரசு கூறினார்.

சாம்சங் தொழிலாளர்களின் போராட்டம் குறித்து நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:-

சாம்சங் தொழிலாளர்களின் பெரும்பாலான கோரிக்கைகளை நிறைவேற்ற அந்நிறுவனம் முன்வந்துள்ளது. மாத ஊதியத்துடன் ஊக்கத்தொகை, அடிப்படை வசதிகள் போன்ற கோரிக்கைகளை சாம்சங் ஏற்றுள்ளது. சாம்சங் நிறுவனம் வேறு மாநிலத்திற்கு இடம்மாறுவதாக வெளியாகும் செய்திகள் தவறானவை. தொழில் முதலீட்டுக்கு உகந்த மாநிலமாக தமிழ்நாடு உள்ளது.

சி.ஐ.டி.யூ. தொழிற்சங்கத்தை அரசு அங்கீகரிக்காது என எப்போதும் சொல்லவில்லை. அப்பகுதியில் இயங்கும் பல தொழிற்சாலைகளில் இந்த சங்கத்தை அரசு அங்கீகரித்துள்ளது. இவ்விவகாரத்தில் சாம்சங் நிறுவனம், தொழிற்சங்கத்தை அங்கீகரிக்க எதிர்ப்பு தெரிவித்துள்ளது. நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் அரசு தற்போது எந்த முடிவும் எடுக்க முடியவில்லை.

நீதிமன்றத்தில் உள்ள இவ்விவகாரத்தில், நீதிமன்றம் என்ன முடிவு கூறினாலும் அதனை அரசு செயல்படுத்தும். தொழிலாளர்களின் பல கோரிக்கைகளை நிறுவனம் ஏற்றுக்கொண்டுள்ளது. எனவே, சாம்சங் தொழிலாளர்கள் போராட்டத்தை கைவிட வேண்டும். அரசியல் கட்சிகள் அனுமதியின்றி போராடினால் எப்போதும்போல காவல்துறை கைது செய்து பின்னர் விடுவிப்பது வாடிக்கையானது.

அதே போலதான் போராடிய தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டு உடனடியாக பிணையில் விடுவிக்கப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் யாரும் ரிமாண்ட் செய்யப்படவில்லை. தொழிலாளர்களின் நலனும் முக்கியம்; இளைஞர்களின் வேலைவாய்ப்பு அரசுக்கு முக்கியம். போராடும் தொழிலாளர்களை விரோதமாக பார்க்கவில்லை; அடக்குமுறை நடக்கவில்லை. போராட்டத்தை அரசியலாக பார்க்கவில்லை. சி.ஐ.டி.யு.க்கும் அரசுக்கும் எந்த விரோதமும் இல்லை. பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவர அரசு தயாராக உள்ளது. இவ்வாறு அமைச்சர் கூறினார்.

# சிஐடியூ பிரச்சனை: சாம்சங் நிறுவனம் தமிழ்நாட்டை விட்டு வெளியேற முடிவு?

சென்னை, 09 அக் 2024: 2000 ஊழியர்களைக் கொண்ட சாம்சங் நிறுவனம், சி.ஐ.டி.யூ பிரச்சனை காரணமாக தமிழ்நாட்டை விட்டு வெளியேற உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஸ்ரீபெரும்புதூர் சாம்சங் இந்தியா எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் ஊழியர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தத்தை அறிவித்துத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். போராட்டத்தில் ஈடுபடும் தொழிலாளர்கள் பணிக்கு திரும்ப வேண்டும் என்றும், அவர்கள் வேலைக்கு வராவிட்டால் சம்பளம் பிடித்தம் மற்றும் பணி நீக்கம் உள்ளிட்ட நடவடிக்கை செய்யப்படும் என சாம்சங் நிறுவனம் தெரிவித்தது. ஆனாலும் தொடர்ந்து தொழிலாளர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், சாம்சங் தொழிலாளர்கள் போராட்ட விவகாரத்தில் விரைந்து தீர்வு காண வேண்டும் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவுறுத்தி உள்ளார். ஏற்கனவே நடைபெற்ற 3 கட்ட பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்படாத நிலையில், அமைச்சர்கள் டி ஆர் பி. ராஜா, தா.மோ. அன்பரசன், கணேசன் ஆகியோர் தலைமையில் நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்பட்டது.

இதில் 14 அம்ச கோரிக்கைகளுடன் உடன்பாடு ஏற்பட்டு ஒரு தரப்பு தொழிலாளர்களுடன் ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. அரசின் கோரிக்கைடை ஏற்று தொழிலாளர்கள் பணிக்குத் திரும்ப வேண்டும் என அமைச்சர் தா. மோ. அன்பரன் கேட்டுக்கொண்டார். ஆனால் சிஐடியு தொழிற்சங்கத்தினர் பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்படவில்லை எனவும், போராட்டம் தொடரும் என்றும் அறிவித்துள்ளனர்.

சிஐடியுவை பதிவு செய்வதை தவிர மற்ற அனைத்துக் கோரிக்கைகளையும் ஏற்றுக்கொண்டதாக சாம்சங் நிறுவனம் விளக்கமளித்துள்ளது. மேலும் சிஐடியு பதிவு விவகாரம் நீதிமன்றத்தில் உள்ளதால் தமிழ்நாடு அரசு இதில் தலையிட வேண்டாம் எனவும் சாம்சங் நிறுவனம் கேட்டுக்கொண்டதாக கூறப்படுகிறது. இந்நிலையில், சாம்சங் நிறுவனம் சி.ஐ.டி.யூ பிரச்சனையின் காரணமாக தமிழ்நாட்டை விட்டு வெளியேற உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# தியாகி இம்மானுவேல் சேகரனார் பிறந்தநாள்: ஸ்டாலின் புகழாரம்

சென்னை, 09 அக் 2024: இன்று தியாகி இம்மானுவேல் சேகரனாரின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:

''வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் கலந்துகொண்டு நாட்டு விடுதலைக்காகச் சிறை ஏகியவரும், ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக விடுதலைக்காக இரட்டைக்குவளை எதிர்ப்பு மாநாடு உள்ளிட்ட பெரும் போராட்டங்களை முன்னெடுத்தவருமான தியாகி இம்மானுவேல் சேகரனாரின் பிறந்தநாள்!

கடந்த ஆண்டு, அவரது நூற்றாண்டை முன்னிட்டு, இம்மானுவேல் சேகரனார் நல்லடக்கம் செய்யப்பட்ட பரமக்குடியில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டது நமது திராவிட மாடல் அரசு.

அவரது நினைவுச் சின்னங்களும் வரலாறும் அவர் முன்னெடுத்த உரிமைப்போரும் நமது சமூகநீதி முயற்சிகளுக்கு என்றும் ஊக்கமளிக்கட்டும்''. இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

# அடக்கு முறையால் ஒடுக்க நினைப்பதா? எடப்பாடி கண்டனம்

சென்னை, 09 அக் 2024: சாம்சங் தொழிலாளர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி தமிழக அரசு இந்த பிரச்சினையை சுமூகமாக தீர்க்க வேண்டும் என எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது: -

காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார்சத்திரத்தில் உள்ள சாம்சங் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தொழிலாளர் - நிறுவனம் - அரசு முத்தரப்பு பேச்சுவார்த்தையில் முழுமையான தீர்வு எட்டப்படாத நிலையில், அரசு தரப்பில் பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாக செய்திகள் வழங்கப்பட, தொழிலாளர்கள் அதனை முற்றிலுமாக மறுத்து போராட்டத்தை தொடர்ந்து வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று காலை பேருந்துகளில் ஏறி, காவல்துறையினர் சாம்சங் தொழிலாளர்கள் இருக்கிறார்களா என்று சோதனையிட்டதாகவும், நள்ளிரவில் வீடு புகுந்து கைது செய்திருப்பதாகவும் வரும் செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன.

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு குறித்து நான் நாள்விடாது சுட்டிக்காட்டி வருகிறேன். அத்தகு குற்றங்களை செய்தவர்களை பிடிப்பதில் தி.மு.க. அரசு காட்டாத முனைப்பை, நியாயமான கோரிக்கைகளுக்காக போராடும் தொழிலாளர்களை ஒடுக்குவதில் காட்டுவது ஏன்?

போராட்டங்களை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துவைக்க திராணியின்றி, அடக்குமுறையால் ஒடுக்க முயலும் தி.மு.க. அரசுக்கு எனது கடும் கண்டனம். உழைப்பாளர் தினத்தன்று மட்டும் சிகப்பு சட்டை போட்டுகொண்டு, "நானும் தொழிலாளி" என்று மேடையில் மட்டும் முழங்கும் முதலமைச்சர் ஸ்டாலினுக்கு சிகப்பு சட்டை மீது உண்மையிலேயே மதிப்பிருக்குமாயின், இதுபோன்ற ஜனநாயக விரோத, தொழிலாளர் விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதை விடுத்து, கைது செய்யப்பட்ட தொழிலாளர்களை உடனடியாக விடுவிப்பதுடன், தமிழக அரசு மீண்டும் தலையிட்டு, தொழிலாளர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, உரிய பேச்சுவார்த்தை மூலம் இந்த பிரச்சினையை சுமூகமாக தீர்க்குமாறு வலியுறுத்துகிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## டிவிஎஸ் ஐகியூப் எலக்ட்ரிக் ஸ்கூட்டரில் ரூ.30,000 வரை கேஷ்பேக் மற்றும் பல கவர்ச்சிகரமான சலுகைகளுடன் பண்டிகைக் காலத்தைக் கொண்டாடுங்கள்!




சென்னை, 09 அக் 2024: பண்டிகைக் காலம் நம்மிடையே பெரும் மகிழ்ச்சியையும், கோலாகலமான கொண்டாட்டத்தையும் கொண்டு வருவதால், இரண்டு மற்றும் மூன்று சக்கர வாகனப் பிரிவுகளில் வலுவாக செயல்பட்டு வரும் உலகளாவிய முன்னணி வாகனத் தயாரிப்பு நிறுவனமான டிவிஎஸ் மோட்டார் நிறுவனம், தனது டிவிஎஸ் ஐகியூப் மின்சார ஸ்கூட்டர்களுக்கு ரூ.30,000 வரை பண்டிகை கால சிறப்பு கேஷ்பேக் சலுகையை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறது. இந்த அட்டகாசமான சலுகைகள், 31 அக்டோபர் 2024 வரை தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலங்களில் மட்டும் கிடைக்கும். இதன் மூலம் வாடிக்கையாளர்கள் இந்தியாவின் மிகவும் விருப்பத்திற்குரிய எலக்ட்ரிக் குடும்ப வாகனமாக வரவேற்பைப் பெற்றிருக்கும் டிவிஎஸ் ஐகியூப்-ஐ வெறும் ரூ.90,734-க்கு (தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ள எக்ஸ்-ஷோரூம் விலை) தங்களுடைய சொந்த வாகனமாக்கும் வாய்ப்பை டிவிஎஸ் மோட்டார் நிறுவனம் வழங்குகிறது.

டிவிஎஸ் ஐகியூப் எஸ் வகை வாகனத்திற்கு, தமிழ்நாடு, புதுச்சேரி, உத்தரபிரதேசம், உத்தரகாண்ட், ராஜஸ்தான், கர்நாடகா, கேரளா, ஆந்திரா பிரதேஷ், தெலுங்கானா, குஜராத், ஒடிசா மற்றும் மகாராஷ்டிராவில் உள்ள வாடிக்கையாளர்கள் ரூ.5,999 மதிப்புள்ள 5 ஆண்டுகள்/70000 கிமீ வரை நீட்டிக்கப்பட்ட வாரண்டியைப் பெறலாம். இந்த நீட்டிக்கப்பட்ட வாரண்டிக்கு எந்தவிதமான கூடுதல் கட்டணமும் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது..

மேலே குறிப்பிட்ட சலுகைகளுடன், கேஷ்பேக் சலுகைகளும் கிடைக்கின்றன. இதன் தொடர்ச்சியாக, தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலங்களில் டிவிஎஸ் ஐகியூப் 2.2 கே டபிள்யூ எச் வகை வாகனத்திற்கு ரூ.17,300 வரை கேஷ்பேக் சலுகையும், டிவிஎஸ் ஐகியூப் 3.4 கே டபிள்யூ எச் வகை வாகனத்திற்கு ரூ.20,000 வரையும் கேஷ்பேக் சலுகை வழங்கப்படுகிறது. அதேபோல். ஜூலை 15, 2022-க்கு முன் டிவிஎஸ் ஐகியூப் எஸ்டி வகை வாகனத்திற்காக முன்பதிவு செய்த வாடிக்கையாளர்கள், 5.1 கே டபிள்யூ எச் அல்லது 3.4 கே டபிள்யூ எச் எஸ்டி வகை வாகனத்தை வாங்கும் போது ரூ.10,000 மதிப்பில் லாயல்டி போனஸிலிருந்து பலன் அடையலாம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட வங்கி கார்டுகளில் ரூ.10,000 வரை கேஷ்பேக், வாகனம் வாங்கும் போது கட்ட வேண்டிய குறைந்தபட்ச முன்பணமாக ரூ.7,999 மட்டும் செலுத்தினால் போதும் என்ற வாய்ப்பு மற்றும் ரூ.2,399-ல் தொடங்கும் எளிமையான முறையில் மாதாந்திர தவணையை செலுத்த வாய்ப்பளிக்கும் விருப்பத் தேர்வுகள் போன்ற கவர்ச்சிகரமான சில்லறை நிதிச் சலுகைகளும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. இதனால் இந்த பண்டிகைக் காலத்தில் உங்கள் இல்லத்தில் இருக்க வேண்டிய சவாரி துணையான டிவிஎஸ் ஐகியூப்-ஐ இப்பொழுதே வாங்கிடுங்கள்.

மனதைக் கவரும் இது போன்ற அற்புதமான சலுகைகள் மின்சார வாகன மூலமான போக்குவரத்து முறைக்கு நாம் மாறுவதை ஊக்கப்படுத்துவதோடு, டிவிஎஸ் மோட்டார் நிறுவனத்தின் சூற்றுச்சூழல் சார்ந்த நிலைத்தன்மை மீதான அக்கறை மற்றும் அதிநவீன கண்டுபிடிப்புகளுக்கான அர்ப்பணிப்பையும் முன்னெடுக்கும் வகையில் அமைந்திருக்கின்றன.

## ஏர்டெல்லின் ஏஐ-இயங்கும் நெட்வொர்க் தீர்வு தமிழ்நாட்டிலுள்ள வாடிக்கையாளர்கள் ஸ்பேம் அழைப்புகள் மற்றும் குறுந்தகவல்களுக்கு விடைபெற வழிவகை செய்துள்ளது




சென்னை, 09 அக் 2024: பாரதி ஏர்டெல்லின் புதிய ஏஐ -ஆற்றல்பெற்ற ஸ்பேம் கண்டறியும் அமைப்பு தமிழக வாடிக்கையாளர்களுக்கு மிகவும் தேவைப்படும் ஒரு நிவாரணத்தை வழங்கியுள்ளது. தொடங்கப்பட்ட 12 நாட்களில் இந்த முன்னோடி தொலைத்தொடர்பு தீர்வு தமிழ்நாட்டில் 112 மில்லியன் நிகழும் சாத்தியம் கொண்ட ஸ்பேம் அழைப்புகளையும் 3 மில்லியன் ஸ்பேம் எஸ்எம்எஸ் செய்திகளையும் வெற்றிகரமாகக் கண்டறிந்து தடுத்துள்ளது.

மாநிலத்தில் உள்ள அனைத்து ஏர்டெல் மொபைல் வாடிக்கையாளர்களும் இப்போது சேவையைக் கோரவோ அல்லது செயலியைப் பதிவிறக்கவோ தேவையில்லாமல் இலவச தீர்வுக்கான ஆட்டோமேட்டிக் அணுகலைப் பெறலாம்.

இந்த அறிமுகத்தைக் குறித்து பாரதி ஏர்டெல் நிறுவனத்தின் தமிழ்நாடு தலைமைச் செயல் அதிகாரி தருண் விர்மாணி கூறும்போது, “இன்றைய டிஜிட்டல் லேண்ட்ஸ்கேப்பில் ஸ்பேம் அழைப்புகளும் சந்தேகத்திற்குரிய உரைகளும் வாடிக்கையாளர்களுக்கு பெரிய அளவில் கவலைதரும் விஷயமாக உள்ளன. இதற்குத் தீர்வுகாண ஏர்டெல் நிறுவனம் ஏர்டெல் எக்கோசிஸ்டத்தில் தங்குதடை இல்லாமல் இயங்கும் ஒருங்கிணைக்கப்பட்ட நவீன ஏஐ -ஆற்றல்பெற்ற ஒரு தீர்வை அறிமுகப்படுத்தியுள்ளது. கூடுதல் பதிவிறக்கமோ அல்லது சிக்கலான அமைப்புகளோ தேவை இல்லாமல் இந்தத் தீர்வு பயனர்களுக்கு நன்மைகளை வழங்குகிறது. தீங்கிழைப்போர்க்கு பலியாவதைப் பற்றி கவலைப்படாமல் தமிழ்நாட்டில் உள்ள 29.8 மில்லியன் ஏர்டெல் வாடிக்கையாளர்கள் சிறந்த மன அமைதியுடன் இருக்க இது உதவுகிறது. இந்தப் புதுமையான சலுகையின் மூலம் ஏர்டெல் தனது வாடிக்கையாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி நம்பிக்கைக்குரிய தொலைத்தொடர்பு பார்ட்னராக தொழில்துறையில் ஒரு புதிய தரத்தை உருவாக்கியுள்ளது” என்றார்.

ஏர்டெல்லின் தரவு விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்ட ஏஐ - ஆற்றல் பெற்ற இந்தத் தீர்வு அழைப்புகள் மற்றும் எஸ்எம்எஸ்-களை "சந்தேகத்திற்குரிய ஸ்பேம்" என அடையாளம் காணவும் வகைப்படுத்தவும் காப்புரிமை பெற்ற அல்காரிதத்தைப் பயன்படுத்துகிறது. அதிநவீன ஏஐ அல்காரிதம் மூலம் இயங்கும் நெட்வொர்க், அழைப்பாளர் அல்லது அனுப்புநரின் பயன்பாட்டு முறைகள், அழைப்பு/ எஸ் எம் எஸ் அலைவரிசை மற்றும் அழைப்புக் காலம் போன்ற பல்வேறு அளவுருக்களை நிகழ்நேர அடிப்படையில் பகுப்பாய்வு செய்கிறது. ஏற்கெனவே அறியப்பட்ட ஸ்பேம் முறைகளுக்கு எதிராக இந்தத் தகவலை கிராஸ்-ரெஃபரன்சிங் செய்வதன் மூலம் சந்தேகத்திற்குரிய ஸ்பேம் அழைப்புகள் மற்றும் எஸ்எம்எஸ்களை இந்த அமைப்பு துல்லியமாக அடையாளம் காண்கிறது. இந்தத் தீர்வில் இரண்டு வடிகட்டிகளைக் கொண்ட இரட்டை அடுக்கு பாதுகாப்பு உள்ளது. ஒன்று நெட்வொர்க் லேயரிலும் இரண்டாவது ஐடி சிஸ்டம்ஸ் லேயரிலும் உள்ளன. ஒவ்வொரு அழைப்பும், எஸ்எம்எஸ்-உம் இந்த இரட்டை அடுக்கு ஏஐ கவசம் வழியாகச் செல்கின்றன. இரண்டு மில்லி விநாடிகளில் 1.5 பில்லியன் செய்திகளையும் 2.5 பில்லியன் அழைப்புகளையும் இந்தத் தீர்வு செயலாக்கம் செய்கிறது. ஏஐ- இன் ஆற்றலைப் பயன்படுத்தி நிகழ்நேர அடிப்படையில் 1 டிரில்லியன் பதிவுகளைச் செயலாக்கம் செய்வதற்கு இது சமம்.

மேலும் எஸ்எம்எஸ் மூலம் பெறப்பட்ட தீங்கிழைக்கும் இணைப்புகள் குறித்து வாடிக்கையாளர்களை இத்தீர்வு எச்சரிக்கிறது. இதற்காக ஏர்டெல் பிளாக்லிஸ்ட் செய்யப்பட்ட யூ ஆர் எல் -களின் மையப்படுத்தப்பட்ட தரவுத்தளத்தை உருவாக்கியுள்ளது. மேலும் சந்தேகத்திற்குரிய இணைப்புகளை தற்செயலாக கிளிக் செய்வதில் இருந்து பயனர்களை எச்சரிப்பதற்காக அதிநவீன ஏஐ அல்காரிதம் மூலம் ஒவ்வொரு எஸ்எம்எஸ் உம் நிகழ்நேரத்தில் ஸ்கேன் செய்யப்படுகிறது. இந்தத் தீர்வால் அடிக்கடி நிகழும் ஐஎம்ஈஐ மாற்றங்கள் போன்ற முரண்பாடுகளைக் கண்டறிய முடியும். இது மோசடியான செயல்பாட்டின் பொதுவான குறிகாட்டியாகும். இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகளை அடுக்கடுக்காக அமைப்பதன் மூலம் ஸ்பேம் மற்றும் மோசடி அச்சுறுத்தல்களின் பெருகி வரும் லேண்ட்ஸ்கேப்புக்கு எதிராக அதன் வாடிக்கையாளர்கள் அதிகபட்ச பாதுகாப்பைப் பெறுவதை நிறுவனம் உறுதி செய்கிறது.

## வியன்னா வால்வ் சாதனத்தைப் பயன்படுத்தி டி ஏ வி ஆர் மருத்துவச் செயல் முறைகளை வெற்றிகரமாக நிகழ்த்தும் காவேரி மருத்துவமனை வடபழனி

சென்னை, 08 அக் 2024: மருத்துவ தொழில்நுட்பத்தில் ஒரு முக்கிய முன்னேற்றமாக வியன்னா வால்வ் சிஸ்டம் என்பதை பயன்படுத்துகிற டிரான்ஸ்கதீட்டர் பெருநாடி வால்வு மாற்றீடு (டி ஏ வி ஆர்) என்ற நவீன மருத்துவச் செயல்முறையை காவேரி மருத்துவமனை, வடபழனி அறிமுகம் செய்திருக்கிறது. இந்த நவீன தொழில்நுட்பத்தின் மூலம் பெருநாடியில் கடுமையான சுருக்கம்/அடைப்புகள் திறம்பட இப்போது சிகிச்சையின் மூலம் குணப்படுத்த முடியும். குறிப்பாக வயதில் முதிய நோயாளிகள் மற்றும் பல்வேறு இணை நோய்கள் உள்ள நபர்களுக்கு வழக்கமான அறுவைசிகிச்சைக்குப் பதிலாக உயிர் காக்கும் ஒரு மாற்றுசிகிச்சை வழிமுறையை இது வழங்குகிறது. இதய சிகிச்சையில் நாடளவில் புகழ்பெற்றிருக்கும் காவேரி மருத்துவமனை வடபழனி, புத்தாக்கமான வியன்னா வால்வு சிஸ்டம் என்பதன் மூலம் டி ஏ வி ஆர் வெற்றிகரமாக மேற்கொண்டிருக்கிற இந்தியாவின் முதல் மருத்துவ மையம் என்ற பெருமையை பெற்றிருக்கிறது. குறைவான கரோனரி உடற்கூறியல் காரணமாக இடது கரோனரி தமனியை பாதுகாப்பதற்கான அவசியம் இருந்த ஒரு நோயாளிக்கு கடுமையான தமனி குறுக்கம்/அடைப்பு கண்டறியப்பட்டது. வழக்கமான அறுவைசிகிச்சையில் அதிக இடர்வாய்ப்புகள் இந்நோயாளிக்கு இருந்த நிலையில் முதுநிலை இதய இடையீட்டு சிகிச்சை நிபுணர்கள் டாக்டர். ஆர். ஆனந்தராமன் மற்றும் டாக்டர். சி. சுந்தர் ஆகியோர் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட இந்த துரிதமான மற்றும் துல்லியமான மருத்துவச் செயல்முறையின் செயலாக்கம் எதிர்பார்த்த சிறப்பான சிகிச்சை விளைவை இந்நோயாளிக்கு தந்திருக்கிறது. டி ஏ வி ஆர் என்பது 65 வயதிற்கும் அதிகமான பெருநாடி குறுக்கம் உள்ள நோயாளிகளுக்கு முக்கியமான சிகிச்சை விருப்பத்தேர்வாக இருக்கிறது. இதயத்திலிருந்து இரத்த ஓட்டத்தை தடை செய்யும் விதத்தில் குறுகலான பெருநாடி வால்வுகள் இந்நோயாளிகளுக்கு இருக்கும். இதயச் செயல்முறையானது, பக்கவாதம், சிறுநீரக செயலிழப்பு, கல்லீரல் நோய் மற்றும் புற்றுநோய் போன்ற அதிக சிக்கலான பாதிப்புள்ள இளம் நோயாளிகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது. இத்தகைய நோயாளிக்கு வழக்கமான திறந்தநிலை இதய அறுவைசிகிச்சை அதிக இடர்வாய்ப்புள்ளதாக இருக்குமென்பதால் விரைவாக மீளும் கால அளவுடன் குறைவான ஊடுருவல் உள்ள சிகிச்சை விருப்பத்தேர்வாக டி ஏ வி ஆர் இருக்கிறது. வழக்கமான டி ஏ வி ஆர் வால்வுகளுக்கு மருத்துவச் செயல்முறைக்கு முன்னதாக கேத் லேப்-ல் மருத்துவக் குழுவினரால் சுருள் உண்டாக்கலும், தயார் செய்தலும் அவசியமாக இருக்கும். இதற்கு அதிக நேரம் எடுப்பதோடு அவசர நிலை சூழல்களின்போது கடும் சிரமமாகவும் இருக்கும். ஒரு நோயாளியின் உயிரைக் காப்பாற்றுவதற்கு விரைவான முடிவுகள் தேவைப்படுகிற நிலையில் இச்செயல்முறையில் தாமதங்கள் ஏற்படக்கூடும். பி & எஃப் - ரெலிசிஸ் உருவாக்கப்பட்டுள்ள வியன்னா டி ஏ வி ஆர் சிஸ்டம், இச்செயல்முறையில் நிலைமாற்றத்தை உருவாக்கியிருக்கிறது. வழக்கமான சாதனங்களுக்கு கடைசி நிமிடத்தில் சுருள் உண்டாக்கல் மற்றும் தயார் செய்தல் தேவைப்படும். ஆனால் சிறப்பாக தயார் செய்யப்பட்ட உலர் திசுவின் மூலம் வியன்னாவால் முன்பே ஏற்றப்பட்டதாக இருப்பதால் மருத்துவப் பணியாளர்கள் இப்பணியை செய்வதை அவசியமற்றதாக ஆக்கி விடுகிறது. வியன்னா வால்வுகளை மருத்துவமனைகள் வாங்கி இருப்பில் வைத்துக் கொண்டு தேவைப்படும்போது இப்புத்தாக்கத்தை உடனடியாக பயன்படுத்திக் கொள்ள முடியும். அவசர நிலைகளின்போது விரைவான மற்றும் அதிக திறன்மிக்க சிகிச்சையை இது உறுதி செய்யும். செயல்முறைக்கு ஆகும் நேரம் குறைக்கப்படுவது நோயாளிக்கான சிகிச்சை விளைவுகளையும், மருத்துவமனையின் ஆதாரவளங்களையும் மேம்படுத்தும்; சிறப்பாக நெறிமுறைப்படுத்தப்பட்ட சிகிச்சை பராமரிப்பிற்கு இது வழிவகுக்கும். மிகவும் சிக்கலான பாதிப்புள்ள நோயாளிகளுக்கு மிக வேகமாகவும், திறம்படவும் சிகிச்சையளிக்க எங்களுக்கு இது உதவுவதால் வியன்னா டி ஏ வி ஆர் சிஸ்டம் ஒரு சிறப்பான மாற்றத்தை உருவாக்கும் சாதனமாக இருக்கிறது என்று டாக்டர். ஆர். ஆனந்தராமன் குறிப்பிட்டார். அவசர நிலைகளின்போது வேகமும், திறமையும் இன்றியமையாதவை என்று குறிப்பிட்ட அவர், இத்தொழில்நுட்பமானது செயல்முறை நேரத்தைக் குறைத்து ஒட்டுமொத்த வெற்றி விகிதத்தை மேம்படுத்துகிறது மற்றும் நோயாளிகளுக்கு சிறப்பான சிகிச்சை விளைவுகளை ஏற்படுத்துகிறது என்று சுட்டிக்காட்டினார்.

காவேரி மருத்துவமனைகள் குழுமத்தின் இணை நிறுவனர் மற்றும் செயலாக்க இயக்குநர் டாக்டர். அரவிந்தன் செல்வராஜ் பெருமிதத்துடன் கூறியதாவது: “நவீன தொழில்நுட்பத்தின் வழியாக உலகத்தரத்திலான உடல்நல சிகிச்சையை வழங்குவதில் காவேரி மருத்துவமனையில் உள்ள நாங்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறோம். நோயாளியின் பாதுகாப்பை உறுதி செய்கிற மற்றும் இந்தியாவில் சிகிச்சை தரநிலையை மேம்படுத்துகிற நவீன சிகிச்சை விருப்பத்தேர்வுகள், வியன்னா டி ஏ வி ஆர் சிஸ்டம் -ன் வெற்றிகரமான செயலாக்கத்தின் மூலம் வழங்கப்படுகின்றன. பெருநாடியின் கடுமையான குறுக்கம்/அடைப்பு மற்றும் பிற இதய பிரச்சினைகளால் அவதிப்படுகிற ஆயிரக்கணக்கான நோயாளிகள், இந்த நவீன செயல்முறையின் மூலம் சிறப்பான எதிர்காலத்திற்கான நம்பிக்கையை இப்போது பெறலாம். பாதிப்பிலிருந்து விரைவாக மீளும் வசதியையும் மற்றும் மிக மிக குறைவான சிக்கல்கள் என்பதையும் இது வழங்குவதால் பல நோயாளிகள் அதிகம் விரும்பக்கூடிய விருப்பத்தேர்வாக வியன்னாவால் உருவெடுக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. காவேரி மருத்துவமனை வடபழனி, உடல்நல பராமரிப்பின் புத்தாக்கத்தின் ஒரு முன்னோடியாக நோயாளிகளுக்கான சிகிச்சையில் புதிய தரநிலைகளை தொடர்ந்து நிறுவி வருகிறது. இம்மருத்துவமனை அறிமுகம் செய்திருக்கிற வியன்னா டி ஏ வி ஆர் சிஸ்டம், நோயாளிகளின் வாழ்க்கையை மேம்படுத்த மருத்துவ தொழில்நுட்பத்தில் மிக சமீபத்திய மேம்பாடுகளை அங்கீகரித்து பயன்படுத்துவதில் இதன் பொறுப்புறுதியை வெளிப்படுத்துகிறது. வியன்னா வால்வு சிஸ்டத்தை காவேரி மருத்துவமனை வடபழனி அமலாக்கம் செய்திருப்பது இதய சிகிச்சையில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல் நிகழ்வாக கருதப்படுகிறது. சுகாதார பராமரிப்பில் மிக சமீபத்திய புத்தாக்கங்களுக்கான அணுகுவசதியை இது நோயாளிகளுக்கு வழங்கி வருகிறது.

# 2,500 சைக்கிள் ஓட்டுநர்கள் பந்தயம் ரூ.33.6 லட்சத்தில் சென்னை எச்சிஎல் சைக்ளோதானில்




சென்னை, 08 அக் 2024: உலகளாவிய முன்னணி நிறுவனமான எச்சிஎல் குழுமம், எச்சிஎல் சைக்ளோதான் சென்னை 2024 இன் இரண்டாவது பதிப்பை இன்று வெற்றிகரமாக நிறைவுசெய்தது, இதில் 2,500க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். தமிழ்நாடு அரசுடன் இணைந்து, இந்திய சைக்கிள் ஓட்டுதல் சம்மேளனத்தின் (சிஎப்ஐ) கீழ் எச்சிஎல் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில், அனைத்து தரப்பு சைக்கிள் ஓட்டும் ஆர்வலர்களும் கலந்துகொண்டு, தொழில்முறை மற்றும் அமெச்சூர் சைக்கிள் ஓட்டுநர்கள் பல்வேறு பிரிவுகளில் போட்டியிட்டு மொத்தப் பரிசுகளை வென்றனர். இந்தியாவில் எந்த சைக்கிள் பந்தயத்திலும் இல்லாத அளவுக்கு ரூ. 33.6 லட்சம் பரிசு.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசின் விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் முதன்மைச் செயலாளர் அதுல்யா மிஸ்ரா, தலைமை விருந்தினராகப் பங்கேற்ற இந்திய சைக்கிள் ஓட்டுதல் கூட்டமைப்பு (சிஎஃப்ஐ) உதவிச் செயலாளர் வி என் சிங் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்வின் வெற்றி குறித்து கருத்து தெரிவித்த எச்சிஎல் கார்ப்பரேஷன் இயக்குனர் ஷிகர் மல்ஹோத்ரா, "ஒரு அமைப்பாக, சமூக ஈடுபாட்டை வளர்ப்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம், இதுபோன்ற வெகுஜன நிகழ்வுகள் அனைத்து தரப்பு மக்களையும் ஒன்றிணைக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். ஆனால் எச்.சி.எல் சைக்ளோதான் மூலம் ஒரு கூட்டு மனப்பான்மையைத் தூண்டுகிறது ஒன்றாக இருப்பது ஆரம்பம், ஆனால் ஒன்றாக சைக்கிள் ஓட்டுவது வெற்றி."

தமிழக அரசின் கூடுதல் தலைமைச் செயலர் அதுல்யா மிஸ்ரா, "சென்னையின் விளையாட்டு நாட்காட்டியில் எச்சிஎல் சைக்ளோதான் ஒரு முக்கிய நிகழ்வாக உறுதியாக நிலைநிறுத்தப்பட்டுள்ளது, மேலும் இதுபோன்ற பரவலான மற்றும் உற்சாகமான பங்கேற்பைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த நிகழ்வுகள் ஊக்குவிப்பது மட்டுமல்லாமல். உடற்தகுதி ஆனால் சமூக நல்வாழ்வு உணர்வை வளர்க்கிறது, இது ஆரோக்கியமான தமிழ்நாட்டுக்கான எதிர்கால பதிப்புகளை ஆதரிப்பதோடு இந்த முயற்சி வளர்ச்சியடையும்.எங்கள் இலக்குகளுடன் ஒத்துப்போகிறது, இந்திய சைக்கிள் ஓட்டுதல் சம்மேளனத்தின் (சிஎப்ஐ) உதவிச் செயலாளர் வி என் சிங் மேலும் கூறுகையில், "சைக்கிள் ஓட்டுதலை ஊக்குவிப்பதில் எச்சிஎல்- இன் தொடர்ச்சியான அர்ப்பணிப்பு உண்மையிலேயே போற்றத்தக்கது. இது போன்ற நிகழ்வுகளை நடத்துவதன் மூலம், அவர்கள் சைக்கிள் ஓட்டுபவர்களுக்கு தங்கள் திறமையை வெளிப்படுத்த ஒரு தளத்தை உருவாக்குவது மட்டுமல்லாமல் எண்ணற்றவர்களுக்கு ஊக்கமளிக்கிறார்கள். இந்த முயற்சியானது இந்தியாவில் வலுவான சைக்கிள் ஓட்டுதல் கலாச்சாரத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது, அதே நேரத்தில் நாடு முழுவதும் ஆரோக்கியம், உடற்பயிற்சி மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்துகிறது."

பந்தயம் மாயாஜால் மல்டிபிளெக்ஸில் தொடங்கி முடிவடைந்தது மற்றும் கோவளம் மற்றும் மகாபலிபுரம் வழியாக இயற்கை எழில் கொஞ்சும் பாதையில் சென்றது, தொழில்முறை சைக்கிள் ஓட்டுபவர்கள் மற்றும் அமெச்சூர்களுக்கு போட்டி மற்றும் பலனளிக்கும் அனுபவத்தை வழங்கியது. எச்சிஎல் சைக்ளோதான் சென்னை 2024 ஆனது #சேன்ஜ் யுவர் கியர் மற்றும் #கியர் போடு சென்னை என்ற கருப்பொருளை ஏற்றுக்கொண்டது, இது தனிப்பட்ட ஆரோக்கியம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய இரண்டிலும் சைக்கிள் ஓட்டுதலின் உருமாறும் சக்தியை ஊக்குவிக்கிறது.

# கார்ப்பரேட் சமூகப் பொறுப்பில் சிறந்துவிளங்கியதற்காக கோகோ-கோலா இந்தியா நிறுவனத்திற்கு மஹாத்மா விருது வழங்கப்பட்டுள்ளது




சென்னை, 08 அக் 2024: கோகோ-கோலா இந்தியா நிறுவனத்திற்கு, கார்ப்பரேட் சமூகப் பொறுப்பில் சிறந்து விளங்குவதற்கான மகாத்மா காந்தி விருது வழங்கப்பட்டுள்ளது. நீர்ப் பொறுப்புணர்வு, வட்டப் பொருளாதாரம் மற்றும் நிலையான விவசாயம் போன்றவற்றின் மூலம் சமூக மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்புக்கான நிறுவனத்தின் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளுக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. டெல்லியில் உள்ள இந்திய சர்வதேச மையத்தில் அக்டோபர் 1ஆம் தேதி நடைபெற்ற காந்தி ஜெயந்தி விழாவில், முன்னாள் ஐபிஎஸ் அதிகாரி டாக்டர் கிரண் பேடி இந்த விருதை வழங்கினார்.

இந்த அங்கீகாரம் குறித்து, கோகோ-கோலா இந்தியா மற்றும் தென்கிழக்கு ஆசியாவின், மூத்த இயக்குனர்-சி எஸ் ஆர் மற்றும் நிலைப்புத்தன்மை, (ஐ என் எஸ் டபிள்யூ ஏ) ராஜேஷ் அயாபில்லா கருத்து தெரிவிக்கையில், “சி எஸ் ஆர் இல் சிறந்து விளங்கும் கார்ப்பரேட் நிறுவனமான இந்த விருதைப் பெறுவதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். இது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான எங்களின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது மற்றும் விவசாயம், கழிவு மேலாண்மை போன்றவற்றில் நிலையான நடைமுறைகளைப் பயன்படுத்த சமூகங்களுக்கு அதிகாரமளிக்கிறது. இந்த கௌரவமானது முழு குழு, எங்கள் கூட்டாளிகள் மற்றும் நாங்கள் இணைந்து உருவாக்க முயற்சிக்கும் அர்த்தமுள்ள தாக்கத்தின் அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும்” என்று கூறினார்.

நிறுவனத்தின் நிலைத்தன்மை முன்முயற்சிகளின் மையத்தில் மூன்று முக்கிய கவனம் செலுத்தும் பகுதிகள் உள்ளன: நீர் பொறுப்புணாவு, நிலையான பேக்கேஜிங் மற்றும் நிலையான விவசாயம். நிறுவனத்தின் 2030 நீர் பாதுகாப்பு உத்தியானது அழுத்தமான நீர் ஆதாரங்களை நிரப்புவதையும் சமூக நீர் அணுகலை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. பழ வட்டப்பொருளாதார முயற்சியின் மூலம், குறிப்பாக திட்டம் உன்னதி, நிறுவனம் 13 மாநிலங்களில் நீடித்த விவசாய நடைமுறைகள் மூலம் லட்சக்கணக்கான சிறு மற்றும் குறு விவசாயிகளை மேம்படுத்தி, விவசாயிகளுக்கு உற்பத்தித்திறனை அதிகரிக்கவும், வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் உதவுகிறது. இதற்கிடையில், நிறுவனத்தின் நிலையான பேக்கேஜிங் முயற்சிகளின் கீழ் 'கழிவு இல்லாத உலகம்' செயல்திட்டம், வடிவமைப்பு, சேகரிப்பு மற்றும் கூட்டாளர் தூண்களின் கீழ் அதன் செயல்திட்ட முன்முயற்சிகள் மூலம் ஒரு வட்டப் பொருளாதாரத்தை ஊக்குவிக்கிறது.

# கம்போடியாவில் சைபர் குற்றத்திலிருந்து 67 இந்தியர்கள் மீட்கப்பட்டனர்



சென்னை, 08 அக் 2024: கம்போடியாவின் புனோம் பென் நகரில் உள்ள இந்திய தூதரகம் ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையில், போலி வேலை வாய்ப்புகள் என்ற போர்வையில் சைபர் கிரைம் வலையில் சிக்கிய 67 இந்திய பிரஜைகளை வெற்றிகரமாக மீட்டுள்ளது. இந்த நபர்கள் கம்போடியாவில் லாபகரமான வேலைவாய்ப்பைப் பெற்றுத் தருவதாகக் கூறி மோசடி முகவர்களால் ஏமாற்றப்பட்டனர்.

கம்போடியாவின் பாய்பெட்டில் மீட்புப் பணி நடைபெற்றதை உறுதி செய்து இந்திய தூதரகம் புதன்கிழமை அறிக்கை ஒன்றை வெளியிட்டது. இதுபோன்ற மோசடி முகவர்களிடம் சிக்கியுள்ள இந்திய குடிமக்களை மீட்டு, தாயகம் திரும்ப அனுப்பும் பணியில் தூதரகம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. தூதரக அதிகாரிகளின் பிரத்யேக குழு இந்த செயல்முறையை மேற்பார்வையிட்டு வருகிறது, மீட்கப்பட்டவர்கள் சுமூகமாக திரும்புவதை உறுதி செய்வதற்காக ஊழியர்கள் விமான நிலையத்தில் நிறுத்தப்பட்டனர்.

'எக்ஸ்' (முன்னர் ட்விட்டர்) இல் பகிரப்பட்ட சமூக ஊடக இடுகையில், மீட்கப்பட்ட குடிமக்களில் 15 பேர் செப்டம்பர் 30 அன்று இந்தியாவுக்குத் திரும்பினர், அதைத் தொடர்ந்து 24 பேர் கொண்ட மற்றொரு குழு அக்டோபர் 1 அன்று திரும்பியது. மீதமுள்ள 28 பேர் மீண்டும் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வரும் நாட்கள். சைபர் கிரைம் திட்டங்களில் சிக்கிய இந்திய குடிமக்களுக்கு உதவ தூதரகம் விழிப்புடன் உள்ளது. சைபர் கிரைம்களால் பாதிக்கப்பட்ட குடிமக்களுக்கு உதவுவதற்கான தனது உறுதிப்பாட்டை தூதரகம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது மற்றும் கம்போடியா மற்றும் பிற தென்கிழக்கு ஆசிய நாடுகளில் வேலை வாய்ப்புகளுக்கான சந்தேகத்திற்கிடமான வேலை வாய்ப்புகள் அல்லது சமூக ஊடக விளம்பரங்களுக்கு பதிலளிக்கும் போது மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்படுமாறு இந்திய நாட்டினரை வலியுறுத்துகிறது. கூடுதலாக, தூதரகம் அவசர தொடர்பு எண் (+85592881676) மற்றும் உதவியை நாடுவோருக்கு அல்லது இந்தியா திரும்ப விரும்புவோருக்கு மின்னஞ்சல் வழங்கியுள்ளது.

# சாம்சங் தொழிலாளர்கள் கைது: ஐகோர்ட்டில் அவசர முறையீடு

சென்னை, 09 அக் 2024: நள்ளிரவில் வீடு புகுந்து கைது செய்யப்பட்ட சாம்சங் தொழிலாளர்களை விடுதலை செய்யக்கோரி சென்னை ஐகோர்ட்டில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

சாம்சங் நிறுவன தொழிலாளர்கள்பல்வேறு கோரிக்கையை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இந்த நிலையில்தான் நேற்றிரவு போலீசார் போராட்ட பந்தலை அகற்றினர். மேலும் போராட்டத்தில் ஈடுபட்ட முக்கிய நிர்வாகிகளின் வீடுகளுக்கு சென்று போலீசார் நேற்றிரவு கைது செய்துள்ளனர்.

இந்த நிலையில் தொழிலாளர்களை வலுக்கட்டாயமாக கைது செய்து போலீசார் முயற்சி செய்வதற்கு எதிராக சென்னை ஐகோர்ட்டில் அவசர முறையீடு செய்யப்பட்டுள்ளது. சி.ஐ.டி.யு தொழிற்சங்கம் சார்பில் வழக்கறிஞர் திருமூர்த்தி ஆஜராகி அவசர ஆட்கொணர்வு வழக்காக விசாரிக்க வலியுறுத்தியுள்ளார். பிற்பகலில் விசாரிப்பதாக நீதிபதிகள் பாலாஜி மற்றும் வேல்முருகன் அமர்வு தெரிவித்துள்ளது.

# இதுவரை இல்லாத மிக அதிக விற்பனை அளவை எட்டியிருக்கும் ஹை - டெக் பைப்ஸ் லிமிடெட்!

சென்னை, 08 அக் 2024: இந்தியாவில் ஸ்டீல் டியூப்கள் மற்றும் பைப்கள் உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் ஹை - டெக் பைப்ஸ் லிமிடெட், 2025 நிதியாண்டில் 2024, செப்டம்பர் 30 அன்று முடிவடைந்த இரண்டாவது காலாண்டு மற்றும் முதல் அரையாண்டிற்கான சிறப்பான விற்பனை அளவு தரவுகளை பெருமிதத்துடன் விளைவித்திருக்கிறது. கியூ2 எப்ஒய்25-ல் 123,027 எம்டி என்ற விற்பனை அளவை இந்நிறுவனம் தெரிவித்திருக்கிறது. முந்தைய ஆண்டின் இதே காலஅளவோடு ஒப்பிடுகையில் (ஒய்ஓஒய்) இது 22.50% என்ற குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும். எப்ஒய்25-ன் முதல் அரையாண்டை பொறுத்தவரை விற்பனை அளவானது 245,182 எம் டி-ஐ எட்டியிருக்கிறது; ஒய்ஓஒய் அடிப்படையில் இது 32.55% என்ற மிகச்சிறப்பான வளர்ச்சியை இது பிரதிபலிக்கிறது. உட்கட்டமைப்பு நீர் போக்குவரத்து மற்றும் சோலார் மின்சக்தி உட்பட முக்கியமான பிரிவுகளில் தேவையில் காணப்பட்ட அதிகரிப்பே இந்த வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்திருக்கிறது. பருவமழை காலத்தில் ஏற்பட்ட சவால்களையும் மீறி, முக்கியமான உட்கட்டமைப்பு செயல்திட்டங்களில் அதிகரித்திருக்கும் அரசின் செலவினத்தின் காரணமாக உருவான வாய்ப்புகளை ஹை - டெக் வெற்றிகரமாக பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் செயல்திட்டங்களில் தனியார் துறையின் முதலீடும் இதற்கு பங்களிப்பை தந்திருக்கிறது. ஹை - டெக் பைப்ஸ் லிமிடெட் தலைவர் திரு. அஜய் குமார் பன்சால் இந்நிகழ்வின்போது கூறியதாவது: “குறிப்பிடத்தக்க வளர்ச்சி அளவுகளை தெரிவிப்பதில் நாங்கள் பெருமை கொள்கிறோம். முக்கியமான துறைகளில் எமது வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது எமது திறனையும் மற்றும் எமது வலுவான சந்தை அந்தஸ்தையும் இது சுட்டிக்காட்டுகிறது. உட்கட்டமைப்பு, நீர் போக்குவரத்து மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறைகளில் ஸ்டீல் பைப்களுக்கான வலுவான தேவையோடு எமது உத்தி வாய்ந்த முன்னெடுப்பு நடவடிக்கைகளும் ஒன்றிணைந்து இந்த சிறப்பான விற்பனை அளவுகளை நாங்கள் எட்டுவதற்கு வழிவகுத்திருக்கிறோம். பண்டிகைக் காலம் விரைவில் நெருங்கி வருகின்ற நிலையில் இனிவரும் காலங்களிலும் தொடர்ச்சியான வளர்ச்சி குறித்து நாங்கள் அதிக நம்பிக்கை கொண்டிருக்கிறோம்; இக்காலகட்டத்தின்போது தேவையில் ஒரு வளர்ச்சி உத்வேகம் இருக்குமென்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் உட்கட்டமைப்பு செயல்திட்டங்களின் ஆதரவும் இணைவதால் நிலையான வெற்றியை சாதிப்பவர்களாக இது எங்களை நிலைநிறுத்தும். தரம், நிலைப்புத்தன்மை மற்றும் இயக்க திறன் மீதான எமது பொறுப்புறுதி தளமின்றி தொடர்ந்து வலுவாக இருந்து வருகிறது. சந்தையில் எமது முதன்மை அந்தஸ்தை பேணுவதற்கு புத்தாக்கம் மற்றும் வாடிக்கையாளர் திருப்தி மீதான எமது கூர்நோக்கம் இனியும் வலுவாக தொடரும்”. நீண்டகால வங்கிக் கடன் வசதிகளுக்காக “ஐஎன்டி ஏ” கிரெடிட் ரேட்டிங் மற்றும் குறுகிய கால வங்கிக்கடன் வசதிகளுக்காக ஐஎன்டி ஏ1 கிரெடிட் ரேட்டிங் சமீபத்தில் கிடைத்திருப்பதை இந்நிறுவனம் பெருமையுடன் அறிவித்திருந்தது. எஸ்விசி வங்கிக்கு தற்போது இருந்து வரும் கிரெடிட் வெளிப்பாட்டிற்காக இந்த தரக்குறியீட்டை இந்தியா ரேட்டிங்ஸ் & ரீசர்ச் பிரைவேட் லிமிடெட், ஹை - டெக் பைப்ஸ் லிமிடெட் - க்கு வழங்கியிருக்கிறது.